**வகுப்பு : 12**

தேர்வு எண் | C | H | E | Y | 1 | A | I

# முதல் திருப்புதல் தேர்வு - ஜனவரி - 2024

நேரம் : 3.00 மணி]

## தமிழ்

[மொத்த மதிப்பெண்கள் : 90

அறிவுரைகள் : 1. அனைத்து வினாக்களும் சரியாக பதிவாகி உள்ளதா என்பதனைச் சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின், அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்.

2. நீலம் அல்லது கருப்பு மையினை மட்டுமே எழுதுவதற்கும் அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும்.

குறிப்பு : விடைகள் தெளிவாகவும், குறிப்பிட்ட அளவினதாகவும், சொந்த நடையிலும் அமைதல் வேண்டும்.

### பகுதி – I

குறிப்பு: அ) அனைத்து வினாக்களுக்கும் விடை தருக. 14X1=14

ஆ) கொடுக்கப்பட்ட நான்கு விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையினைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதுக.

1. "மீண்டுமந்தப் பழமைநலம் புதுக்குதற்கு" கவிஞர் குறிப்பிடும் பழமைநலம்.

க) பாண்டியரின் சங்கத்தில் கொலுவிருந்தது உ) பொதிகையில் தோன்றியது

ங) வள்ளல்களைத் தந்தது

அ) க மட்டும் சரி ஆ) க, உ இரண்டும் சரி இ) ங மட்டும் சரி ஈ) க, ங இரண்டும் சரி

2. "உவா உற வந்து கூடும்

உடுபதி, இரவி ஒத்தார்" – யார் யார்?

அ) சடாயு, (இராமன்) ஆ) இராமன் (குகன்) இ) இராமன் (சுக்ரீவன்) ஈ) இராமன் (சவரி)

3. "உள்ளொன்று வைத்துப் புறம் பொன்று பேசுவார்" இத்தொடர் உணர்த்தும் பண்பு

அ) எதிர்மறைப் பண்பு ஆ) நேர்மறைப் பண்பு இ) முரண் பண்பு ஈ) இவை அனைத்து

4. அதிசய மலரின் புன்னகை உணர்த்துவது

அ) நம்பிக்கை ஆ) பெருமிதம் இ) புகழ் ஈ) அச்சம்

5. ஆராய்ந்து சொல்கிறவர்

அ) சொல்லியபடி செய்பவர் ஆ) அரசர் இ) உறவினர் ஈ) தூதுவர்

6. சிறுபாணாற்றுப்படை காட்டும் பாட்டுடைத்தலைவனின் இன்றைய நிலப்பகுதி

அ) விழுப்புரம் ஆ) உதகமண்டலம் இ) தருமபுரி ஈ) திண்டிவனம்

7. இலக்கியத்தையும் மொழியையும் ஒரு சேரப் பேசுகின்ற இலக்கண நூல்

அ) யாப்பருங்கலக்காரிகை ஆ) தண்டியலங்காரம்

இ) தொல்காப்பியம் ஈ) நன்னூல்

8. வெள்ளச் சமவெளிகள் அழியக் காரணம்

அ) பருவநிலை மாற்றம் ஆ) மணல் அள்ளுதல் இ) பாறைகள் இல்லாமை ஈ) நீர் உறிஞ்சப்படுதல்

9. குழிமாற்று எந்தத் துறையோடு தொடர்புடைய சொல்?

அ) கணிதம் ஆ) இலக்கியம் இ) புவியியல் ஈ) வேளாண்மை

10. வேறுபட்டதைக் குறிப்பிடுக.

அ) சேய்மைக் காட்சித் துணிப்பு ஆ) அண்மைக்காட்சித் துணிப்பு

இ) காட்சி மறைவு ஈ) நடுக்காட்சித் துணிப்பு



SS PRITHVI www.Padasalai.Net

Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com

11. "பலர் துஞ்சவும் தாம் துஞ்சான்" – விழித்திருந்தவரும் அவரைப் பாடியவரும்
அ) சோழன் நெடுங்கிள்ளியை (பாணர்) ஆ) சோழன் நலங்கிள்ளியை (கோவூர்கிழார்)
இ) கணைக்கால் இரும்பொறையை, (கபிலர்) ஈ) கரிகாலனை (உருத்திரங்கண்ணனார்)

12. சற்குணரின் உரையை கேட்டுத் தூண்டப்பெற்ற மயிலை சீனி. வேங்கடசாமி எழுதிய நூல்
அ) பௌத்தமும் தமிழும் ஆ) இசுலாமும் தமிழும் இ) சமணமும் தமிழும் ஈ) கிறித்தவமும் தமிழும்

13. "காலை இளம் வெயில் நன்றாக மேய, தும்பறுத்துத் துள்ளிவரும் புதுவெயில்", இக்கவிதையில் ------ பயின்று வந்துள்ளது.
அ) வினைப்படிமம் ஆ) பயன் படிமம் இ) உருப்படிமம் ஈ) மெய்ப்படிமம்

14. "சங்ககாலக் கல்வெட்டும் என் நினைவுகளும்" என்ற கட்டுரையை எழுதியவர்
அ) ஐராவதம் மகாதேவன் ஆ) சாந்தா தத் இ) பூமணி ஈ) உத்தமசோழன்

## பகுதி – II

### பிரிவு–1

எவையேனும் மூன்றனுக்கு விடை தருக. **3x2=6**

15. நகரம் பட்டை தீட்டிய வெள்ளை வைரமாகிறது – விளக்கம் தருக.
16. எத்திசையிலும் சோறு தட்டாது கிட்டும் – யார்க்கு?
17. மன உறுதியின் தேவை பற்றித் திருக்குறள் யாது கூறுகிறது?
18. முகம் முகவரியற்றுப் போனதற்கு சுகந்தி சுப்பிரமணியன் கூறும் காரணத்தை எழுதுக.

### பிரிவு–2

எவையேனும் இரண்டனுக்கு விடை தருக. **2x2=4**

19. ஆளுக்கொரு மரம் வளர்ப்போம் என்னும் முழக்கத் தொடர் வாயிலாக எவற்றை வலியுறுத்துவாய்?
20. புக்கில், தன்மனை – சிறு குறிப்பு எழுதுக.
21. பருவத்தே பயிர் செய் – நேர மேலாண்மையோடு பொருத்தி எழுதுக.

### பிரிவு–3

எவையேனும் ஏழனுக்கு விடை தருக. **7x2=14**

22. சொல்லைப் பிரித்து சேர்த்தும் தொடரமைக்க.
அ) வெங்காயம் (அல்லது) ஆ) தலைமை

23. கலைச்சொல் தருக.
அ) PLATFORM ஆ) MINI MEALS

24. பொருத்தமான வேற்றுமை உருபுகளைச்சேர்த்து முறையான தொடர்களாக ஆக்குக.
அ) காலை எழுந்து படித்து நமக்கு நன்மை ஏற்படும்.
ஆ) சான்றோர் மதிப்பு கொடுத்து வாழ்வு உயரலாம்.

25. உவமைத் தொடரைச் சொற்றொடரில் அமைத்து எழுதுக.
அ) தாமரை இலை நீர்போல் ஆ) கிணற்றுத்தவளைபோல

26. ஏதேனும் ஒன்றனுக்குப் பகுபத உறுப்பிலக்கணம் தருக.
அ) வெகுளி ஆ) பொலிந்தான்

27. ஏதேனும் ஒன்றனுக்குப் புணர்ச்சி விதி தருக.
அ) நன்மொழி ஆ) எத்திசை

28. ஈற்றடி எழுதித் துளிப்பாவை நிறைவு செய்க.
அ) பூத்த மலரொன்று பறக்கிறது -------
ஆ) வானம் அழுகிறது பூமி சிரிக்கிறது -------



SS PRITHVI www.Padasalai.Net

Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com

29.கீழ்க்காணும் தொடர்களில் அடைப்புக்குள் உள்ள பெயர்ச்சொல்லைத் தொடர்களுக்கு ஏற்றவாறு மாற்றி எழுதுக.

அ) நேற்று முதல் ------- (அணை, நீர்மட்டம் உயர்ந்து வருகிறது)

ஆ) உங்களுக்கு ------- (யார், நன்மை என நினைக்கிறீர்கள்)

30.விடைக்கேற்ற வினா அமைக்க.

அ) 1856 இல் தென்னிந்தியாவின் முதல் தொடர்வண்டி நிலையம் இராயபுரத்தில் அமைக்கப்பட்டது.

ஆ) "யதார்த்த நிகழ்வைப் படைப்பாளுமையுடன் வெளிப்படுத்துவதே ஆவணப்படம்" என்கிறார் கிரியோர்சன.

## பகுதி – III

### பிரிவு–1

எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடை தருக. 2x4=8

31. செம்பரிதி மலைமேட்டில் தலையைச் சாய்ப்பான் செந்நிறத்துப் பூக்காடாம் வான மெல்லாம், தொடர் வெளிப்படுத்தும் காட்சி நயத்தை விளக்குக.

32.குகனோடு ஐவராகி, வீடணனோடு எழுவரான நிகழ்வுகளைச் சுட்டிக் காட்டுக.

33.நாட்டிய அரங்கின் அமைப்பை இளங்கோவடிகள் காட்சிப்படுத்தும் பாங்கு குறித்து உங்கள் கருத்தை எழுதுக.

34."ஈசன்மகன் நின்றனர் ஓர் ஏழையென ஓர்மின்" – இடஞ் சுட்டிப் பொருள் விளக்குக.

### பிரிவு–2

எவையேனும் இரண்டனுக்கு விடை தருக. 2x4=8

35.மழைவெள்ளப் பாதிப்பிலிருந்து காத்துக்கொள்ளும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளைக் குறிப்பிடுக.

36.நீங்கள் ஆசிரியரானால் மாணாக்கரை அன்பினால் எவ்வகையில் நெறிப்படுத்துவீர்கள்?

37.நெல்லின் நேரே வெண்கல் உப்பு – இத்தொடரின் வழி பண்டமாற்று வணிகத்தை விளக்குக.

38.மயிலை சீனிவேங்கடசாமி நினைவுச் சிறப்பிதழுக்குச் செய்திகள் உருவாக்கித் தருக.

### பிரிவு–3

எவையேனும் மூன்று வினாக்களுக்கு விடை தருக. 3x4=12

39. தமிழாக்கம் தருக.

அ) Learning is a treasure that will follow its owner everywhere.

ஆ) A new language is a new life.

இ) If you want people to understand you, speak their lauguage.

ஈ) Knowledge of languages is the doorway to wisdom.

(அல்லது)

39.காது கேளாதவர்களுக்கான மாற்று வினா.

கீழ்க்காணும் பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.

இன்றைய வாழ்க்கைச் சூழலில் ஓய்வின்மை, காலம் தவறிய உணவுப், உணவுப் பழக்கவழக்கமாற்றம் உள்ளிட்டவையே பல்வேறு உடல்நலப் பாதிப்புகளுக்கு மூல காரணமாகின்றன. மருத்துவம்சார்ந்த தேவைகளுக்கென்று குறிப்பிட்ட தொகையை ஒதுக்கும் அளவிற்கு உடல்நிலையைக்கவனத்தில் கொள்ளாமல், ஓர் இயந்திர வாழ்க்கையை வாழ்ந்து கொண்டிருக்கிறோம். உணவே மருந்து மருந்தே உணவு என்று வாழ்ந்தவர்கள் நம் முன்னோர்கள். ஒருவர் உட்கொள்ளும் உணவில் புரதம், கொழுப்பு, மாச்சத்து கனிமங்கள், நுண்ணூட்டச் சத்துக்கள் சேர்ந்ததே சமச்சீர் உணவு எனவே அளவறிந்து உண்ண வேண்டியது அவசியமாகும்.

வினாக்கள்:

அ) உடல்நலப் பாதிப்புகளுக்கு மூல காரணமாவை எவை?

ஆ) எப்படிப்பட்ட வாழ்க்கையை நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம்?

இ) நம் முன்னோர்கள் எவ்வாறு வாழ்ந்தார்கள்? ஈ) சமச்சீர் உணவு என்றால் என்ன?



Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com

PRIT~EDUCATION- SS PRITHVI www.Padasalai.Net www.TrbTnpsc.com

40.பின்வரும் பழமொழியை வாழ்க்கை நிகழ்வோடு பொருத்தி எழுதுக.

அ) யானைக்கும் அடிசறுக்கும் **(அல்லது)**

ஆ) எறும்பு ஊரக் கல்லும் தேயும்

41. நெய்தல் திணையைச் சான்றுடன் விளக்குக.

**(அல்லது)**

பரிசில் துறையைச் சான்றுடன் விளக்குக.

42.இலக்கிய நயம் பாராட்டுக. (மையக்கருத்துடன் ஏற்புடைய மூன்று நயங்களை எழுதுக.)

*வானரங்கள் கனிகொடுத்து மந்தியொடு கொஞ்சும்*
*மந்திசிந்து கனிகளுக்கு வான்கவிகள் கெஞ்சும்*
*கானவர்கள் விழியெறிந்து வானவரை யழைப்பார்*
*கமனசித்தர் வந்துவந்து காயசித்தி விளைப்பார்*
*தேனருவித் திரையெழும்பி வானின் வழி யொழுகும்*
*செங்கதிரோன் பரிக்காலுந் தேர்க்காலும் வழுகும்*
*கூனலிளம் பிறைமுடித்த வேணியலங்காரர்*
*குற்றாலத் திரிகூட மலையெங்கள் மலையே*

– திரிகூட ராசப்பக் கவிராயர்

43.எடுத்துக்காட்டு உவமையணியை விளக்கிக் கீழ்க்காணும் குறளுக்கு இவ்வணியைப் பொருத்தி எழுதுக.

துஞ்சினார் செத்தாரின் வேறு அல்லர் எஞ்ஞான்றும்
நஞ்சுஉண்பார் கள்உண் பவர். **(அல்லது)**

தொழில் உவமை அணியைச் சான்றுடன் விளக்குக.

## பகுதி – IV

**அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.** **3x6=18**

44. அ) சினத்தைக் காத்தல் வாழ்வை மேன்மைப்படுத்தும் – இக்கூற்றை முப்பால் வழி விரித்துரைக்க.

**(அல்லது)**

ஆ) சென்னையில் உள்ள மயிலாப்பூர், கந்த கோட்டப் பகுதிகள் செய்யுளில் எவ்விதம் காட்சிப்படுத்தப்படுகின்றன?

45. அ) 'நெகிழி தவிர்த்து நிலத்தை நிமிர்த்து' என்னும் தலைப்பில் சுற்றுச்சூழல் ஆர்வலர் பசுமைதாசனாருடன் நீங்கள் நடத்திய கற்பனைக் கலந்துரையாடலைத் தொகுத்து எழுதுக.

**(அல்லது)**

ஆ) நிருவாக மேலாண்மை குறித்து வெ. இறையன்பு கூறும் கருத்துகளைத் தொகுத்து எழுதுக.

46.அ) பாரதியின் கடிதம் வாயிலாக நீங்கள் அறிந்து கொண்ட மொழிப்பற்று, சமூகப்பற்று ஆகியவற்றை விவரிக்க.

**(அல்லது)**

ஆ) மகாநடிகரைக் கண்ட பாலசந்திரனின் மனவோட்டத்தை நயத்துடன் எழுதுக.

## பகுதி – V

**அடிபிறழாமல் செய்யுள் வடிவில் விடை தருக.** **4+2=6**

47. அ) "இதில் வெற்றிபெற" என்னும் தலைப்பில் இடம்பெற்றுள்ள "விண்வேறு ......" எனத் தொடங்கும் பாடலை அடிபிறழாமல் எழுதுக.

ஆ) 'மகற்கு' – என முடியும் குறளை அடிபிறழாமல் எழுதுக.



Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com